**செய்தி வெளியீடு எண்: 525** **நாள்: 06.08.2018**

**ஜி.எஸ்.டி வரி குறைப்பு எதிரொலி நுகர்வோர் நலன் கருதி – பொட்டலப் பொருட்களில் விலை குறைத்து விற்பனை செய்ய அறிவிப்பு**

21.07.2018 அன்று நடைபெற்ற ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டவாறு 27.07.2018 முதல் மத்திய அரசு பெயிண்ட், வார்னிஷ், குளிர்சாதன பெட்டி, வாசிங்மிஷின், தொலைக்காட்சி பெட்டி, கிரைண்டர், மிக்ஸி, வாசனை திரவியங்கள் உள்ளிட்ட சில இனங்களுக்கு ஜி.எஸ்.டி வரி விதிப்பு விகிதத்தினை 28,18,12,5 சதவிகிதத்திலிருந்து வரி குறைக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி ஜி.எஸ்.டி வரிகுறைப்பு காரணமாக பொதுமக்கள் / நுகர்வோர்கள் குறைக்கப்பட்ட வரிவிகிதத்தின் பயனை பெரும் பொருட்டு மத்திய அரசு நுகர்வோர் பாதுகாப்பு துறை, சட்டமுறை எடையளவு பிரிவு அறிவுறுத்தியதின் படி 2011ம் ஆண்டு சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள் விதி 33(1) மற்றும் 6(3)ன் படி பொட்டலப் பொருட்களில் ஜி.எஸ்.டி வரி குறைப்பு காரணமாக குறைக்கப்பட வேண்டிய தொகையினை பொட்டலப் பொருட்களில் தனியாக ஸ்டிக்கர் ஒட்டியும், முத்திரை அல்லது ஆன்லைன் பிரிண்டிங் மூலமாக அறிவிப்பு செய்தும், ஏற்கனவே உள்ள அதிகபட்ச சில்லறை விற்பனை விலை அருகிலேயே புதிய ஸ்டிக்கர் ஒட்டி விற்பனை செய்யுமாறு உற்பத்தியாளர் / பொட்டலமிடுபவர்கள் / இறக்குமதி செய்து பொட்டலமிடுபவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஜி.எஸ்.டி வரிகுறைப்பு காரணமாக குறைக்கப்பட்ட விலையில் ஸ்டிக்கர் ஒட்டி விற்பனை செய்யும் அனுமதி இருப்பில் உள்ள விற்கப்படாத உற்பத்தி செய்யப்பட்ட / பொட்டலமிடப்பட்ட / இறக்குமதி செய்து பொட்டலமிடப்பட்ட இனங்களுக்கு பொருந்தும். இந்த பொருட்களை 31.12.2018 வரை விற்பனை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், ஏற்கனவே MRP குறித்து ஒட்டப்பட்ட ஸ்டிக்கரில் திருத்தம் செய்யவோ, அடிக்கப்படவோ, சுரண்டப்படவோ கூடாது என்ற விவரம் தெரிவிக்கப்பட வேண்டும்.

ஜி.எஸ்.டி வரிகுறைப்பு காரணமாக பொதுமக்கள் / நுகர்வோர்கள் பயனடையும் வகையில் பொட்டலப்பொருட்களில் குறைக்கப்பட்ட விலையில் அறிவிப்பு செய்து விற்பனை செய்யாத தயாரிப்பாளர்கள் மற்றும் வணிகர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஜி.எஸ்.டி வரி குறைப்பினால் பொட்டலப் பொருட்களின் மீது குறைக்கப்பட்ட MRP விலையில் விற்பனை செய்யாதது தொடர்பாக புகார்கள் ஏதுமிருப்பின் நுகர்வோர்கள் TN-LMCTS கைபேசி செயலியை பதிவிறக்கம் செய்து அதன் மூலமாகவோ அல்லது கைபேசி எண். 9445398770 மூலமோ தங்கள் புகார்களைத் தெரிவிக்கலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**